1992 மார்ச் 17]

(அ) அவினாசி ஒன்றியம் அன்னூரில் பேரூராட்சியின் பராமரிப்பில் பேருந்து நிலையம் ஏற்கனவே இயங்கி வருகிறது. எனவே, அரசிடம் செயற்குறிப்பு எதுவும் நிலுவையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் (திருமதி) மு. சின்னியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் அவினாசி தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி. அவினாசி தொகுதி அன்னூரில் மொத்தம் 21 பஞ்சாயத்துக்கள் உள்ளன. சுமார் 1½ இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அங்கு சந்திக்கிறார்கள். திருப்பூரிலிருந்து ஊட்டி, மேட்டுப்பாளையம், கோயம்பத்தூர் போன்ற வண்டிகள் சந்திக்கும் பொது இடமாக இருக்கிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் ஒரு சிறு இடத்தில் வாகனங்களை நிறுத்துவதில் பல்வேறு தொழில்களைச் செய்வதற்கு பொதுமக்களுக்கு சிரமமும் வண்டிகளை பிரதான சாலைகளில் நிறுத்துவதால் விவசாய பெருமக்களுக்கும், மாணவர்களுக்கும் சிரமம் ஏற்படுவதால், மிகுந்த அவதிக்குள்ளாகிறார்கள். எனவே மனம் குளிர நல்லாட்சி புரிகின்ற நமது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சியில் எங்களது அன்னூர் தொகுதிக்கு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் — சமுதாயக் கூடம் பேருந்து நிலையம் உள்ளடக்கிய ஒரு பேருந்து நிலையம் அமைத்துத்தர அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்துடைய முதல்வர் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடன் கலந்தாலோசித்து இதுபற்றி முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 252. திரு. வி. கே. சின்னசாமி. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

252—

நெல் மூட்டைகளை எடுத்துச்செல்ல லாரி, டிராக்டர் வாங்கல்

*1887—திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளை எடுத்துச்செல்ல லாரி, டிராக்டர் போன்ற வாகனங்கள் [illegible] செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தற்போது கையிலே இருக்கின்ற லாரிகளைத் தவிர வேறு லாரி, டிராக்டர்கள் வாங்குகின்ற திட்டம் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக கொள்முதல் செய்யப்படும் நெல் போன்ற பொருள்களை உடனுக்குடன் குறிப்பிட்ட நேரத்தில் எடுத்துச் செல்ல முடியாத காரணங்களினால் அந்த நெல் பழுப்பு அடைந்து, அரிசிகூட ரேஷன் கடைக்கு வரும் போது பழுப்பு நிறமாக மாறி மக்கள் வாங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே வாணிபக் கழகத்திற்கு என்று வெளியிலேயிருந்து லாரிகள் வாடகைக்கு எடுப்பதிலேகூட நம்முடைய அரசாங்கத்தில் குறிப்பிட்ட வாடகையைத்தான் தருவார்கள் என்று கருதி அவர்கள் வர மறுக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம் முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களோடு கலந்து குறிப்பிட்ட வண்டிகளையாவது எந்த எந்த பகுதிகளுக்கு தேவை என்பதை அறிந்து அதையாவது வாங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்

முற்பகல் 10—25

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடத்தில் சுமார் 8, 9 மாதங்கள்தான் நமக்கு இந்த லாரிகள், ரயில்கள் தேவைப்படுகிறன. தற்போது ஆண்டு ஒன்றுக்கு 1,500 முதல் 2,000 லாரிகளை நாம் பயன் படுத்துகிறோம். இதில் 15 லாரிகளைதான் நாம் சொந்தமாக வைத்து இருக்கிறோம். மீதம் இருப்பதை தனியார் ஒப்பந்தக்காரர் கள், அரசின் பஞ்சாயத்துத் துறைகளில் இருக்கின்ற டிராக்டர் கள் இவைகளைப் பயன்படுத்துகின்றோம். இவை அத்தனையையும் நம்மால், நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் வாங்க முடியாது. ஏற்கனவே இருந்த லாரிகளைக்கூட 1975 ஆம் ஆண்டு அவைகள் எல்லாம் லாபகரமாக இல்லை என்ற காரணத்தால் பொருள் போக்குவரத்துக் கழகத்திற்கு அவைகள் ஒப்படைக்கப்பட்டு விட்டன. எனவே, நாம் இப்போது கடைப்பிடிக்கின்ற முறையே சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நியாயவிலைக் கடைகளுக்கு ஏற்றி செல்கின்ற தனியார் லாரிகளில் கூட இதுபோல் அந்த உரிய கடைகளில் இறக்காமல் குறிப்பிட்ட சர்க்கரை, அரிசியைக்கூட பல ஆண்டு

1992 மார்ச் 17]

களாக அவர்கள் திருடி வருவதாககூட பலமுறை இந்த சட்டமன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆங்காங்கே இருக்கின்ற மாவட்ட அளவில் இருக்கின்ற கூட்டுறவு விற்பனை சங்கங்களிலிருந்துதான் அந்த நியாய விலைக் கடைகளுக்கு அதிகமான அளவில் பொருட்களை ஏற்றிச் செல்கிறார்கள். ஆகவே, அவர்களிடம் ஒரளவுக்கு நிதி ஆதாரம்கூட இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு சொந்த வாகனங்கள் வாங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. ஆனாலும் நீங்கள் அனுமதி அளித்தால் நான் பதில் சொல்ல தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமே லாரி, டிராக்டர் வாங்குவது. ஆனால் நீங்கள் தனியார் லாரிகளில் செய்கின்ற மோசடிகளைப் பற்றிச் சொல்கிறீர்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி: தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதி தந்தால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவதாக சொல்கிறார். தயவு செய்து ....

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரிகளை வாங்குவதைப் பொறுத்தவரையில் ஏற்கனவே நுகர்பொருள் வாணிபக் கழகம் வங்கிகளிலிருந்து வாங்கிய கடனை வைத்துதான் மிகவும் சிரமப்பட்டு நாம் பொருட்களை வாங்கிக் கொண்டிருக்கிறோம். ஏறத்தாழ இதுவரையில நமக்கு கடனே 430 கோடி ரூபாயிலிருந்து 450 கோடி ரூபாய வரை இருக்கிறது. இதில் தமிழக அரசு கொடுக்க வேண்டியது 220 கோடி ரூபாய் வேறு இருக்கிறது. இவைகளை வைத்துக் கொண்டு இன்னும் லாரிகளை ஆயிரக்கணக்கில் வாங்கி அந்த லாரிகளுக்கு பணியாளர்களை அமர்த்தி அவர்களை எல்லாம் மெயின்டெனன்ஸ் செய்வது என்பது சாமியார் பூனை வளர்த்த கதையாக ஆகிவிடும். (சிரிப்பு) எனவே, இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு இருப்பதை வைத்துக்கொண்டு இதை நடத்தலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 253, திரு. ப. ரங்கநாதன், திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.